**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.70/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நடராஜன் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணம்ம நாயுடு (எ) கண்ணய்யா நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 91 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**19.01.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெலுங்குதான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு படித்து காண்பித்தார்கள். எனக்கு 91 வயதாகிறது என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால் 5 பேர் ஆவார்கள். 1. சாவித்திரியம்மாள், 2.பத்மாவதி, 3. நான், 4. பக்தவச்சலம், 5. என் தங்கை ராமானுஜம் ஆவார்கள். எனக்கு எத்தனை வயதில் திருமணம் ஆனது என்றால் 17 வயதிருக்குள்ளாகவே இருக்கும். என் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த நிலையில் எனது திருமணத்தை பார்க்க ஆசைப்பட்டதால் சிறுவயதிலேயே திருமணம் செய்துவிட்டார்கள்.

2. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 6 குழந்தைகள் ஆவார்கள். நான், சாவித்திரியம்மாள், பத்மாவதி, பக்தவச்சலம், என் தங்கை ராமானுஜம் ஆகிய அனைவரும் வழக்கு சொத்தில்தான் பிறந்து வளர்ந்தோம் என்றால் ஆமாம். என் அப்பா எப்படி இறந்தார் என்றால் 1990ல் இறந்தார். வாதி தணிகாசலம் யார் என்றால் என் தம்பி பக்தவச்சலத்தின் மகன் ஆவார். வழக்கு தாக்கல் செய்தது தெரியுமா என்றால் எனக்கு வழக்கு தாக்கல் செய்தது முதலில் தெரியாது. எனக்கு அறிவிப்பு வந்த பின்புதான் தெரியும். நான் என் வழக்கறிஞரை வைத்து பதில் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் தற்போது ஞாபகம் வரவில்லை.

3. வழக்கு சொத்தில் மொத்தம் எத்தனை புல எண் உள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. எனது எதிர்வழக்குரையில் பட்டா என் பெயரில் இருப்பதாக சொல்லியிருப்பதில் நான் யாரிடமாவது கிரையம் வாங்கினேனா என்றால் என் தம்பியிடம் நான் வாங்கினேன். நிலம், வீட்டு மனையை என் மாமனார் வாங்கி கொடுத்தார். ஆனால் பத்திரமாக எழுதவில்லை. நான் கிரையம் வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் பெயரில் இருந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் எனக்கு முன்பு என் அப்பா இருந்தார் என்றால் ஆமாம். என் அப்பா பெயரில்தான் அடங்கல் இருந்தது என்றால் ஆமாம். பக்தவச்சலம் எப்போது இறந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் இருக்கும் வீட்டிற்கு வடக்கே சிமெண்ட் சாலை உள்ளது என்றால் சரிதான்.

4. எனது வீட்டிற்கு மேற்கே ரோசய்யா உள்ளார் என்றால் சந்து உள்ளது. சந்திற்கு பின்பு ரோசய்யா உள்ளார். தெரு பகுதியும் என் பெயரில்தான் உள்ளது. தெருவை என் அப்பா வாங்கியிருந்தார். அதையும் என் மாமா எனக்கு வாங்கி கொடுத்தார். நான் மேலே சொல்லும் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் வீட்டின் கிழக்கே பக்தவச்சலம் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் தற்போது பக்தவச்சலம் மகன் தணிகாசலம் உள்ளார் என்றால் ஆமாம். என் வீட்டிற்கு தனியாக மின்சாரம் உள்ளது தணிகாசலம் வீட்டிற்கு தனியாக மின்சாரம் உள்ளது என்றால் இரண்டு வீட்டிற்கும் மின்சாரம் என் பெயரில்தான் உள்ளது. தணிகாசலம் வீட்டின் மின் இணைப்பு எண்.25 என் மின் இணைப்பு எண்.29 ஆகும். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தணிகாசலம் வீட்டின் மின் இணைப்பு எண் அவர் பெயரில்தான் உள்ளது என்றால் இல்லை. என் பெயரில்தான் உள்ளது.

5. என் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பக்தவச்சலம் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்பதை காட்டதான் வா.சா.ஆ 4 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வீட்டு கதவு எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)